30th March 1961]

SRI A. GOVINDASAMY : கனம் அமைச்சர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்திற்கும் வைத்தியச் சலுகை அளிக்கிறபோது சட்டசபை உறுப்பினர் களுக்கு அளிக்க மறுப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது ஆலோசனையில் இருக்கிறது. 1962-ம் ௵ எப்ரல் ௴ 1-ம் தேதியிலிருந்து இந்த 150 ரூபாயைக் கணக்குக்கு எடுத்துக்கொள்ள வேண்டாம் என்பதற்குக் கவனம் இருக்கிறது.

Manpower

* 1210 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether this Government have submitted any scheme or suggestion to the Planning Commission for utilisation of manpower and particularly with a view to give mass employment when agricultural work is slack; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Yes, Sir. Details of the scheme are given in the paper[a] placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : வேலைக்குத் தகுந்த கூலி என்பதற்குப் பதிலாக எந்த வேலை செய்தாலும் அரை நாள் கூலி, ஒரு வேளைச் சாப்பாடு என்று இருப்பதனால் இத் திட்டத்திற்கு ஆதரவு இருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்த அளவுக்கு ஆதரவு இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காகத்தான் இந்தத் திட்டம். இதில் தனிப் பட்டவர்களுக்குச் செய்வது இல்லை. அவர்களுடைய நன்மைக்காக அவர்களே சேர்ந்து அவர்களுடைய சமுதாயத்தின் நன்மைக்காக பல பணிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது அடிப்படையான நோக்கம். எந்த அளவுக்கு இந்த லட்சியம் நிறைவேறும் என்பதைப் பார்ப்பதற்கு ஜில்லா விற்கு ஒரு திட்டம் முன்னோடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது கருத்து.

SRI S. M. ANNAMALAI : இப்போது வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு ப்ளாக்கில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறதே. அது உண்மையா? இந்தத் திட்டம் எந்த எந்த சமுதாய நலத் திட்டப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு ப்ளாக்கில் எடுத்துக் கொள்வதாகத் திட்டம். வட ஆற்காடு மாவட்டத்திலும் ஒரு ப்ளாக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

Works Contract Co-operative Societies

* 1211 *Q*.—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any directions have been given to the Highways and Public Works Department to give special concessions to the Works Contract Co-operative Societies; and

(*b*) the number of such societies so benefited and the value of works contract given to each during the last two years?

THE HON. SRI P. KAKKAN : The attention of the hon. Member is invited to the paper[b] placed on the table of the House.

---

[a] Printed as Appendix VIII on pages 539–544 *infra*.

[b] Printed as Appendix IX on page 544 *infra*.

[30th March 1961

SRI T. S. RAMASWAMY : May I know the number of such societies existing, the number of applications received and how many of these societies were given contributions?

THE HON. SRI P. KAKKAN : There are 38 societies in this State. I do not have figures regarding the number of applications received from them. We have given loans to 14 societies.

SRI V. K. KOTHANDARAMAN : இதுபோன்ற வேலை ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்கள் நமது ராஜ்யத்திலே இருந்து விசேஷ சலுகை பெறுவதோடு மட்டும் அல்லாமல் மத்திய சர்க்காரில் இருந்தும் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளை எடுத்து நடத்துகிறதா? அவர்களுக்கு இந்திய சர்க்கார் மூலமாக என்ன உதவி செய்யப்படுகிறது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையிலும் வேலை ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆதரவு கொடுத்து வருகிறோம்.

SRI R. KRISHNASAMI NAIDU : இந்தத் திட்டத்தின்கீழ் ஜில்லா அளவிலும் ஒரு சொஸைடி ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது. அநுபவ ரீதியில் பார்க்கிறபோது ஜில்லாவிற்கு ஒரு சொஸைடி என்று நடத்துவது அவ்வளவு நன்மை அளிப்பதாக இருக்காது என்று ரிஜிஸ்ட்ரார் முதற் கொண்டு கருதுவதாகத் தெரிகிறது. ஆகவே இப்போது ஏதாவது ஒரு ஜில்லாவிலாவது ஜில்லா சொஸைடி அமைக்கப்பட்டிருக்கிறதா? அது நல்ல முறையில் செயல்படுகிறதா?

THE HON. SRI P. KAKKAN : பல சொஸைடிகள் பல ஜில்லாக்களில் இருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒன்று என்பதாகத் தெரியவில்லை. இதைப்பற்றி தனியாக கேள்வி போட்டால் பரிசீலனை செய்து சொல்கிறேன்.

Admission to Educational Institutions (Removal of reference to caste)

* 1212 *Q.*—SRI A. A. RASHEED:
SRI S. M. ANNAMALAI :
SRI N. K. PALANISAMI : } கனம் நிதி அமைச்சர்

தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் சேர்வதற்கான விண்ணப்பத் தாள்களில் சாதி, சமூகப் பெயர் குறிப்பிடுவதை விலக்கவேண்டுமென மாநில அரசாங்கங்களுக்கு மத்திய உள்நாட்டு அமைச்சர் கட்டளையிட்டுள்ளாரா?

THE HON. SRI C. SUBRAMANIAM : A communication had been received from the Government of India on the subject and it is under consideration.

SRI A. A. RASHEED : May I know what action has been taken on this?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is under consideration.

SRI S. M. ANNAMALAI : இப்படி ஜாதிப் பெயர்களை நீக்கிவிடுவதால் பிற்பட்ட இனத்தவர்களுக்கு எப்படிச் சலுகை அளிக்க முடியும்? பிற்பட்ட இனத்தவர்கள் என்றே கண்டுபிடிக்க முடியாது போய்விடக்கூடிய நிலைமை ஏற்படுவதனால் சர்க்கார் பிற்பட்ட இனத்தவர்களுக்கு அளித்து வந்த சலுகைகளை நிறுத்திவிட உத்தேசித்திருக்கிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதனால் தான் இது பரிசீலனை செய்யப்படவேண்டியதாக இருக்கிறது. பிற்பட்ட இனத்தவர்களுக்கு இன்னும் சிறிது காலம் இந்தச் சலுகை அளித்தாக வேண்டும். ஆகவே இவ்விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.